செ.வெ.எண்.299/2009/செமதொஅ நாள்: 15.09.2009

<u>தமிழர்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்தவர் பேரறிஞர் அண்ணா - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பேச்சு</u>

காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட பிள்ளையார்பாளையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா கிளை நூலக திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு ரூ.11.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நூலக கட்டடத்தினை திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார்.

“ காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையத்தில் 1967 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த நூலகத்திற்கான புதிய கட்டடத்தினை இன்று திறந்து வைப்பதை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். தமிழர்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் . இன்று தமிழ்நாடு முழுவதும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவை எழுச்சியோடும், உள்ள உணர்வோடும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மனிதனுக்கு சிறந்த நண்பன் நல்ல நூலாகும். பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களை இளைஞர்கள் படித்து தங்களது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்று புதிய கட்டடத்தில் திறக்கப்பட்டுள்ள நூலகம் பகுதி நேர நூலகமாக உள்ளதாகவும், முழு நேர நூலகமாக மாற்றிஅமைத்து தர வேண்டும் என இந்த பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இந்த நூலகம் விரைவில் முழு நேர நூலகமாக மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் இந்த நூலகத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் அறிவை வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.” என கேட்டுக் கொண்டார். பேரறிஞர் அண்ணா எழுதிய 10 நூல்களை நன்கொடையாக நூலகத்திற்கு வழங்கினார்.

முன்னதாக புதுப்பாளையத் தெருவில் அனைவருக்கும் கல்வித் திட்டம் மற்றும் நகராட்சி கல்வி நிதியின் மூலம் ரூ.16.60 இலட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் நகரமன்ற உறுப்பினரும், மாவட்ட கைத்தறி ஆலோசனைக் குழு உறுப்பினருமான திரு.சி.வி.எம்.அ.சேகர் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சக்தி பெ.கமலாம்பாள் அவர்கள் முன்னிலையுரை ஆற்றினார். முடிவில் மாவட்ட நூலக அலுவலர்(பொ) திரு.வெல்லஸ் ரோஸ் நன்றி கூறினார். மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.த.துரைசாமி, காஞ்சிபுரம் நகரமன்றத் தலைவர் திரு.வி.இராஜேந்திரன், மாநில கைத்தறி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.பொன்மொழி, நகரமன்ற உறுப்பினர் திரு.சன்பிராண்ட் கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் ஒன்றியக்குழுத் தலைவர் திரு.பி.எம்.குமார், மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர் திரு.வி.எஸ்.ராமகிருஷ்ணன், முதன்மை கல்வி அலுவலர் திரு.வெ.ரமணா, காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் திருமதி.மகாலெட்சுமி தேவி, நகரமன்ற உறுப்பினர் திரு.ஜி.ரவி, நகராட்சி பொறியாளர் திரு. கருப்பையா, உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் நூலகத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்

செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.